**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**CC. No.1876/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜெயராமன் | த–பெ | முத்தையா |
| ஊர்: | : | குன்றக்குடி | | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர். | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026**

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் குன்றக்குடியில் வசித்து சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கின் சார்பு ஆய்வாளர் மணிமொழி சிவகங்கை Q பிரிவில் சார்பு ஆய்வாளராப பணியிட மாற்றம் காரணமாக சென்று விட்டதால் அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கினங்க எதிரி தரப்பில் ஆட்சேபனையின்றி அவரது கையொப்பம் தெரிந்த நான் ஆவணங்களில் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

இவ்வழக்கின் விசாரணை அதிகாரி நிலைய பணியில்இருந்த போது 11.04.2022 அன்று 7.00 மணியளவில் காரைக்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த நாச்சம்மை என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலைய குற்ற எண். 35/2022 , இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii), Sec 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் அ.சா.ஆ.5, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6**. பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சிதம்பரம் மற்றும் ராசு ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7, பார்வை மகஜர் அ.சா.ஆ.8**.

பின்னர் இவ்வழக்கின் எதிரிக்கு கு,வி.மு.சா. பிரிவு 41(A) சார்பு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் நிலையம் ஆஜர் ஆன எதிரியை திரேக பரிசோதனை செய்து பின்னர் அன்றைய தினம் 12.15 மணிக்கு சம்பவ இடம் சென்று அங்கியிருந்து வழக்கு சொத்தினை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் கைப்பற்றியுள்ளார். **அத்தாட்சி மகஜர் அ.சா.ஆ.9**. இந்த வழக்கு சொத்தை படிவம் 95 வாயிலாக கனம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார். **படிவம் 95 அ.சா.ஆ.10**. பின்னர்

இந்த வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் நாகேந்திரன் என்பவரை விசாரணை செய்து அவரிடம்இருந்து காய சான்றிதழ்கள் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளா. **விபத்து பதிவேடுடன் கூடிய காய சான்றிதழ்கள் அ.சா.ஆ.11 மற்றும் 12**. மேற்படி நபர்பகளுக்கு ஏற்பட்ட காயம் சாதாரன வகையை சேர்ந்தது என்று அவர் சான்று அளித்துள்ளார். இவ்வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட **புகைப்படம் சா.பொ.1 மற்றும் குறுந்தகடு சா.பொ.2**.

வழக்கின் விசாரணை நிறைவு செய்து எதிரி மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் 04.09.2022 அன்று மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 மற்றும் 2ம் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவ சமயத்தில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களை சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரி தாக்க வில்லை என்றால்சரியல்ல. வழக்கின் ஆவணங்களை அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால்சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.17 10:19:36 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.